# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

லூர்து மேரி, - சென்னை, விர்ஜின், எதெல்பெர்கா, வில்சன் மேரி, டோன்போஸ்கோ மேரி- திருச்சி, ஸ்டெல்லா ரோஸ், மிரியம், அமிர்த ராணி, ஜெரின் மேரி-திண்டுக்கல், மார்சலோசா மேரி, லூயிஸ் ஜெசிந்தா - தூத்துக்குடி, அனன்சியா மேரி, டோனட்டெல்லா அனஸ்த்தாசியாள், சலேத் மேரி - திருப்பூர், புஷ்பா மேரி - காரைக்குடி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, கலிஸ்ட்டா மேரி, தெரசா - மதுரை, அப்போலின்- மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, அருன் சீலி - முட்டம், சகாயம் - கடலூர். ஜெனிபர்- ஹரிஹார், ஜெயசேகரி- கொடைக்கானல், ரோஸ்லினா - சிவகங்கை

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், கிளாரா லூர்து மேரி, அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், லீமா தெரஸ், ஜோஸ்பின் மேரி - திருச்சி; லீலாவதி, இருதய விஜிலா,மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி- திண்டுக்கல்; மேரி - இளையரசனேந்தல்; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மைக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். மரிய பிரகாசம்- தர்மபுரி, பிரேமா மோரிஸ், வியாகுல மேரி,- சென்னை



## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. டொனெட்டல்லா அனஸ்த்தாசியாள்- கும்பகோணம்

திருமதி. மார்கிரேட் பெல்சியா - திண்டுக்கல்

**Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.**
**Editor: Fr. R.M. UGIN WINNER OSM.**







# விண்ணுலக மேன்மை


## பதிப்பாசிரியர் பக்கம்

ந.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச


அவனியில் பிறந்த மனிதர்கள் எல்லாம் மண்ணுலக மாந்தர்கள் என்று அழைக்கப்படும்போது அன்னை மரியாள் மட்டும் விண்ணுலக அரசி என்று அழைக்கப்படுகின்றார். ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி அன்னை மரியாள் விண்ணகம் சென்றதை நாம் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றோம். நம் அன்னை இவ்வளவு பெரிய மேன்மையை பெறுவதற்கு காரணமாக இருப்பது எதுவென்றால் அவர் வாழ்ந்த வாழ்க்கை.

யூதக் கலாச்சாரத்தில் ஒரு பெண் ஆட்சி அதிகாரத்திற்கு வரமுடியுமா என்றால் நிச்சயமாக வரமுடியாது. ஒரு அரசியாக வரமுடியுமா என்றாலும் முடியாது. சமுதாயத்தில் ஒரு தலைவியாக மாறமுடியுமா என்றாலும் முடியாது. ஆனால் அன்னை மரியாள் தான் சார்ந்திருக்கக்கூடிய யூத இனத்தைத் தாண்டி யூத சமுதாயம் தனக்கு போட்டிருக்கக்கூடிய எல்லைகள் அனைத்தையும் தாண்டி அரசியாக மாறுகின்றார். அதுவும் விண்ணுலகத்திற்கே அரசியாக மாறுகின்றார்.

என்ன தகுதியின் அடிப்படையில் அன்னை மரியாள் விண்ணுலக அரசியாக மாறினார் என்றால் ஆண்டவர் இயேசுவின் தாய் என்ற அடிப்படையில் மட்டுமல்ல தான் ஆண்டவர் இயேசுவின் உண்மையுள்ள



## உள்ளே



கதையினில் கலந்த மரியா - 05
முழு விடுதலையடைந்த மரியா - 06
அன்னையின் திருத்தலங்களை நோக்கி - 09
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 14
கார்மல் அன்னை திருவிழா - 16
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் - 17
மரியின் ஊழியர்சபையின் புனிதம் - 24
மரியா - கடவுளின் கடிதம் - 25
பொதுநிலையினரின் பார்வையில் மரியா - 28
ஆகஸ்டு 15 ஓர் ஆனந்தப்பொன்னாள் - 30
ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி - 32

சீடரும்தான் என்ற தகுதியின் அடிப்படையில். அதனால்தான் இயேசுவின் சீடர்களில் ஒருவரான பேதுருவுக்கும் விண்ணுலகில் பெரிய பொறுப்பானது கொடுக்கப்பட்டது. விண்ணுலக கதவுகளின் திறவுகோல் அவரிடம் கொடுக்கப்பட்டது. இந்த பொறுப்பானது கொடுக்கப்படும் அளவுக்கு பேதுரு ஒரு சிறந்த சீடராக நடந்து கொண்டாரா என்றால் இல்லை. இருந்தும் அந்த பொறுப்பானது பேதுருவுக்கு கொடுப்படுகின்றது.

ஒரு சிறந்த சீடராக நடந்து கொள்ளாமல் இருக்கும்போதே பேதுருவுக்கு மிகப்பெரிய பொறுப்பு கொடுக்கப்படும்போது ஒரு சிறந்த சீடராக, தாயாக நடந்து கொண்ட அன்னை மரியாளுக்கு விண்ணக மேன்மை கொடுக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. விண்ணக பேற்றினை அடைந்த அன்னை தன்னை மண்ணுலகில் இருந்து தூரமாக வைத்திருந்தாரா என்றால் இல்லை. மண்ணுலகோடு தொடர்ந்து தொடர்பில் இருந்தார் இன்றும் இருக்கின்றார். இந்த விண்ணேற்பு பெருவிழாவின் சிறப்பம்சம் என்னவென்றால் அது கொண்டாடப்படும் ஆகஸ்டு 15 ஆம் தேதி நம் இந்திய திருநாடானது ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாள்.

இந்தியா ஆங்கிலேய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்றது. அன்னை மரியாள் மண்ணுலக அழிவிலிருந்து வாழ்வு பெற்றார். என்ன காரணத்தினால் அன்னை மரியாளுக்கு விண்ணேற்பு என்ற பேற்றினை கடவுள் கொடுத்தார் என்று பார்த்தோம் என்றால் தன் ஒரே மகனை உலகுக்கு அறிமுகப்படுத்திய அன்னையின் உடலானது பேறுபெற்ற உடல். இயேசுவைத் தாங்கிய கருவறை மிகவும் புனிதமான ஒன்று. அந்த உடலும் கருவறையும் மண்ணோடு மட்கிப்போவதை எப்படி கடவுள் அனுமதிப்பார்.

இயேசு என்ற புனிதரைத் தாங்கிய உடல் புனிதமானது. இயேசு என்ற கடவுளைத் தாங்கிய கருவறை புனிதமானது. இவ்வளவு மேன்மை பொருந்திய புனிதம் மண்ணிலே புதைக்கப்படலாமா? இல்லை அதனால்தான் அன்னை மரியாளுக்கு விண்ணேற்பு என்ற பேற்றினை கடவுள் கொடுக்கின்றார்.

இந்த விண்ணேற்பு பெருவிழாவானது நமக்கு சொல்லித் தருகின்ற பாடம் என்னவென்றால் அன்னை மரியாள் இயேசுவை தன்னுடைய வயிற்றில் சுமப்பதற்கு முன்னால் தன்னுடைய இதயத்திலும் சுமந்ததுபோல நாமும் இயேசுவை நம்முடைய இதயத்தில் சுமப்போம். அவ்வாறு இயேசுவை நம்முடைய இதயத்தில் சுமக்கும்போது கடவுள் நமக்கும் ஒரு அழிவில்லா விண்ணக வாழ்வைக் கொடுப்பார்.

அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவுக்கு ஒரு சிறந்த தாயாக, சீடராக நடந்து கொண்டதுபோல் நாமும் நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவர் இயேசுவுக்கு சிறந்த உண்மையுள்ள சீடர்களாக நடந்து கொள்வோம். விண்ணுலக மேன்மையைப் பெற்றுக் கொள்வோம்.

**விண்ணுலக மேன்மையினை அடைவோம்**
**மண்ணுலக மாண்பினைக் காப்போம்**





அருளால் அழகான குழந்தை கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜானகி – சோழிங்கநல்லூர்**

என் பக்கத்து வீட்டில் ஒரு தம்பதியருக்கு திருமணம் முடிந்து 5 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. நான் ஜீவ மாதாவிடம் ஜெபம் செய்தேன். அவர்களையும் மாதாவிடம் ஜெபம் செய்து நம்பிக்கையோடு ஆலயத்திற்கு வாருங்கள் என்றேன். அவர்களும் வேண்டிக் கொண்டார்கள். குழந்தை வரம் கிடைத்தது. நான் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்தால் சாட்சி சொல்வேன் என்றேன். ஆனால் சாட்சி சொல்ல முடியாமல் போனது. இதேபோன்று என் தங்கை மகள் டெங்கு காய்ச்சலால் அவதிப்பட்டாள். நான் மாதாவிடம் மனமுருக வேண்டினேன் அவள் நலமடையவேண்டி. அதேபோன்று இரண்டு முறை பரிசோதனை செய்தார்கள். மூன்றாம் முறை பரிசோதித்தபோது டெங்கு இல்லை என்றார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சார்லஸ், இளவரசி – சோழிங்கநல்லூர்**

என் மகள் 12-ம் வகுப்பு முடித்துவுடன் கல்லூரி மேற்படிப்புக்காக ஸ்டெல்லா மேரிஸ் மற்றும் வேலூர் அக்ஸீலியம் கல்லூரியில் முயற்சி செய்தோம். நான் ஸ்டெல்லா மேரிஸ் கிடைக்க வேண்டும் என்று கடவுளிடம் ஜெபித்தேன். ஆண்டவரே தாவிதின் மகனே என் மீது மனமிரங்கும் என்று மன்றாடினேன். நான் வேண்டியபடி என் மகளுக்கு ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் இடம் கிடைத்தது. மனதின் விருப்பங்களை மகிழ்வுடன் பெற்றுத்தந்த மாதாவிற்கு கோடானகோடி நன்றி. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.

1 விண்ணுலகில் இருக்கிற 3 அருள் நிறை மரியே தந்தைக்கும் மகனுக்கும்



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

திருமதி. மேரி ஜீவா
சோழிங்கநல்லூர், சென்னை

ஜூலை மாதம் 1 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**கண்ணகிநகர் – கஸ்தூரி**

என் மகன் நல்லமுறையில் 12-ம் வகுப்பு தேர்வெழுதி கல்லூரி சென்றதற்காக மாதாவிற்கு நன்றி. மேலும் என் மகள் நல்லமுறையில் கல்லூரி முடிக்கப்போவதற்காக நன்றி கூறுகிறேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோசப், தீபிகா**

எங்களுக்கு 2020-ல் திருமணம் நடந்தது. ஏழு வருடம் ஆகியும் எனக்கு குழந்தை இல்லை. 2021-ல் முதல் சனிக்கிழமையன்று மாதாவிடம் ஜெபம் செய்தேன். மேலும் டிசம்பர் மாதம் மாதாவின் வளைகாப்புத் திருவிழாவில் பங்கேற்று ஜெபம் செய்தேன். அதன்படி 2022-ல் ஜூன் மாதம் கருவுற்றேன் அழகான பெண் குழந்தை பிறந்தது. எனக்கு சுகப்பிரசவம் வேண்டி ஜெபித்தேன். அதேபோன்று சுகப்பிரசவம் ஆனது. மாதாவை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கு எங்கள் குடும்பம் ஒரு சாட்சி. மாதாவிற்கு கோடான கோடி நன்றிகள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ப்ளாரன்ஸ் – செம்மஞ்சேரி**

நான் வயிற்று வலியால் மிகவும் அவதியுற்றேன். மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு ஸ்கேன் எடுக்க சொன்னார்கள். நான் மாதாவிடம் ஜெபம் செய்தேன். அம்மா எனக்கு அட்மிட் பண்ணாமல் மாத்திரையில் சரியாக வேண்டும் என்று ஜெபித்தேன். அதேபோன்று நவநாளிலும் ஜெபித்தேன். மாதாவின் அருளால் நலம் பெற்றேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மரீட்டா – முகப்பேறு**

எனக்கு திருமணமாகி 4 வருடங்கள் ஆகியும் குழந்தை செல்வம் இல்லை. நான் ஜீவ மாதாவிடம் ஜெபம் செய்தேன். மாதாவின்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



சர் ஐசக் நியூட்டன் புவி ஈர்ப்பு விசையை கண்டுபிடித்தார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அவரிடம் ஒருவர் "நீங்கள் உடலின் உயிர்ப்பை நம்புகிறீர்களா? என்று கேட்டார். ஆம் என்றார் நியூட்டன். அது எப்படி? நம் மனித உடல் மண்ணோடு மண்ணாக கலந்துவிடுமே, பிறகு எப்படி இந்த உடல் திரும்பவும் ஒன்று சேர்ந்து விண்ணகம் செல்லும்? என்று வினவினார். நியூட்டன், அருகிலிருந்த இரும்புத் துகள்களை எடுத்து மண்ணில் கலந்தார். பிறகு "இப்போது மண்ணிலிருந்து இரும்புத் துகள்களை பிரித்தெடுக்க முடியுமா? என்று அவரிடம் கேட்டார். அவரோ "முடியாது" என்றார். உடனே ஒரு காந்தத் துண்டை எடுத்து மண்ணில் அலசினார். இரும்புத்துகள்கள் அதில் ஒட்டிக் கொள்ள அவற்றைத் தனியே பிரித்து எடுத்தார். பிறகு நியூட்டன் சாதாரண காந்தத்திற்கு இவ்வளவு ஆற்றல் உண்டு என்றால் அனைத்தையும் படைத்த கடவுளுக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கும் என்று கூறினார்.

மரியாவைப் பற்றி கத்தோலிக்க திரு அவை வழங்கிய கோட்பாடுகளில் அன்னையின் விண்ணேற்பும் ஒன்றாகும். கி.பி. 1750 நவம்பர் 1 ம் தேதி திருத்தந்தை 12 – ஆம் பத்திநாதர் (munificentissimus Deus) எனும் திருத்தூது அறிக்கையின் மூலம் "மரியாவின் விண்ணேற்பு" ஒரு விசுவாச மறையுண்மை என்று அறிவித்தார்.

மரியாவைப் போன்று கிறிஸ்துவை சார்ந்து வாழ்ந்தவர் எவருமில்லை. ஆகவே மீட்பரின் தாய் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை கல்லறையில் காத்திருக்கத் தேவையில்லை. எனவே அவருடைய இம்மை வாழ்வின் முடிவிலேயே அவர் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார், என்பதே நாம் கொண்டாடும் இந்த விசுவாச மறையுண்மை. இயேசு விண்ணேற்றம் சென்றதை "ஆண்டவரின் விண்ணேற்றம்" என்றும் மரியாள் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை "மரியாவின் விண்ணேற்பு" என்றும் அழைக்கின்றோம். நாம் அனைவரும் விண்ணக எருசலேமின் திருப்பயணிகள். நமது வாழ்க்கைப் பயணம் விண்ணக எருசலேமை நோக்கி இருக்க வேண்டும். நமது வாழ்வு நற்செயல்களால் நிறைந்து, நிலையான நமது ஆன்மாவை காத்துக் கொள்ள வேண்டும். ஆண்டவர் இயேசு (யோ 14:2) ல் "உங்களுக்கு ஓர் இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன்" என்கிறார். புனித பவுல் (பிலி 3:20) ல் "நமக்கோ விண்ணகமே தாய்வீடு" என்கிறார். ஆகவே இம்மையில் நல்வாழ்வு வாழ்ந்து, மறுமையில் விண்ணக வாழ்வை நமதாக்கி கொள்ள முயல்வோம்.

# முழு விடுதலையடைந்த மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

ஆகஸ்டு மாதம் பிறந்ததும் நமது நினைவுகளில் எழுவது இரு பெரிய முக்கிய நிகழ்வுகள் ஒன்று: அந்நியரிடமிருந்து நாம் பெற்ற விடுதலை. இரண்டு: அன்னை மரியா விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது. இரண்டு நிகழ்வுகளும் விடுதலையை உணர்த்துகின்றன. இந்தியா சுதந்திரம் அடைந்திருந்தாலும் கூட நாம் இன்னும் நமக்குள்ளும் மற்றவர்களிடத்திலும் சொல்வதென்ன? ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றோம். ஆனால் நமது நாட்டிலேயே நவீன அடிமைத்தனத்திற்கு ஆளாகி வருகிறோம். சமய சார்பற்ற ஒரு ஜனநாயக நாட்டிலே, சமயத்தின் பெயரால் ஒடுக்கப்படுகிறோம். மணிப்பூரில் நடக்கும் இனக் கலவரம், சமயக் கலவரம் ஆகியவற்றுக்கு அரசு தீர்க்கமான ஒரு முடிவை எடுக்காமல் மௌனியாக இருப்பது நமக்கு பெரும் வேதனையைத் தருகிறது. இச்சூழலில் மரியா விண்ணகத்திற்கு ஆன்மாவோடும் உடலோடும் எடுத்துக்கொள்ளப் பெற்றது, நாம் முழு விடுதலையை அனுபவிப்பவர்களாகவும் அதை நோக்கிப் பயணிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை எடுத்தியம்புகிறது. தான் மட்டுமல்ல, தான் வாழ்ந்த யூத சமுதாயம் அனைத்து அரசியல், பொருளாதார, சமுதாய, சமய, பண்பாட்டு அடிமைச் சூழலிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்ற நம்பிக்கையோடு தனது வேண்டலை எழுச்சிப் பாடலாக, புரட்சிக் கீதமாக முழங்கினார். எனவேதான் நம் அன்னை மரியாவை முழு விடுதலையடைந்தவர் என்று துணிவுடன் கூறலாம். இதை மையக்கருத்தாகக் கொண்ட சிந்தனைகளை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

**சுதந்திர மனநிலை**

'சுதந்திரம்' என்பதற்கு பல விளக்கங்கள் தரப்படுகின்றன. பொதுவாக நாம் ஏற்றுக் கொள்வது யாதெனில், எதைச் செய்தால் எனக்கும் மற்றவருக்கும் நன்மை கிடைக்குமோ அதைச் செய்வதன் மூலம் சுதந்திர மனநிலையோடு நாம் வாழலாம். சுதந்திரம் உள்ளவர்கள்தான் நன்மை, தீமை என்று பகுத்தாய்ந்து சுயமாக முடிவெடுத்து தம் வாழ்வை அமைதியுடன், மகிழ்வுடன் நடத்திச் செல்ல முடியும். மற்றுமொரு புரிதலும் இருக்கிறது. எதிலிருந்து விடுதலை, எதற்காக விடுதலை. நாம் நம்மை அடிமைப்படுத்தும் நிலைகளிலிருந்து விடுதலை பெற நினைக்கின்றோம். அதே வேளையில் எதற்காக இந்த விடுதலை என்ற கேள்வியையும் கேட்க வேண்டும். அநீதியான ஒரு சூழல் நமது குடும்பங்களில், நமது சமுதாயத்தில் நிலவுகிறது என்று வைத்துக்கொள்வோம். இச்சூழலிலிருந்து விடுதலை பெற விரும்புவது நீதிக்கான ஒரு சமுதாயத்தை, குடும்பத்தை உருவாக்குவது என்பது பொருளாகும். நுகர்வு கலாச்சாரத்திலிருந்து நாம் விடுதலை பெற எண்ணுவது எதற்காக? நம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வதற்காக. இத்தகைய புறச் சுதந்திரத்திற்கு அகச் சுதந்திரத்திலிருந்து பயணிக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து உண்மையான சொற்கள் பிறக்க வேண்டும். கோபம், பொறாமை, கூச்சல், குழப்பம் இவையெல்லாம் பிறப்பெடுப்பது உள்ளத்திலிருந்துதான். இவற்றிலிருந்து விடுதலை பெறும்போதுதான் நாம் அகச்சுதந்திரமுள்ளவர்களாக மாறுவோம். தொலைபேசி, அலைபேசி, சமூக ஊடகங்களில் சிக்கி மூழ்கும்போது நாம் அகத்திலும், புறத்திலும் அடிமைகளாக இருக்கிறோம். எனவே ஆகஸ்ட் 15





இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.
அன்னை மரியா மரணத்தை எதிர்கொண்டு
தமது உடலோடும் ஆன்மாவோடும்
விண்ணகம் சென்றார் என்பது நமது விசுவாச சத்தியம்
இயேசுவின் உயிர்ப்பு
அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவருக்கும்
வாழ்வு உண்டு என்பதன் முன்னடையாளம்
மறு உலக வாழ்வு இவ்வுலக வாழ்வின் தொடர்ச்சியே
மனிதன் -உடல், உள்ளம், ஆன்மா என்னும்
முக்கூறுகளின் தொகுப்பு — எனவே
இம்முக்கூறுகளும் செவ்வனே போற்றப்பட வேண்டும்.
இறைவன் தந்த உடலை அன்பு செய்து
போற்றுவதும் பராமரிப்பதும் நமது கடமை
உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
என்கிறார் திருமூலர் என்னும் தமிழ் முனிவர் - எனவே
உடலைப் பண்படுத்தி, உயர் குறிக்கோளில் மனம் பதித்த
ஞான வாழ்வுப் பயிற்சியில் ஆன்மாவை ஆழ்த்துவது
நமது அன்றாட வாழ்வாக வேண்டும்.
இயேசுவின் முதல் சீடர் அன்னை மரியா —அவர்
இயேசுவைத் தம் உதிரத்திலும் உள்ளத்திலும் தாங்கி
அவரது உணர்வுகளோடு ஒன்றாகி
மீட்புத் திட்டத்தில் முழுமையாகத் துணைநின்று
அவரது உயிர்ப்பில் முதன்மையாகப் பங்கு பெறுகிறார்
அன்னை போன்று
ஆண்டவர் இயேசுவின் வழியில் நாமும் சென்று இறந்தோமானால்
நிலைவாழவை உறுதியாகப் பெறுவோம் என்பதை
ஆணித்தரமாக அறிவிக்கிறார் நம் அன்னை.

**செபம்**

அம்மா உம்
அருள் பொங்கும் அழகு திருமுகம் நோக்கி
இருள் நீக்கும் பன்னிரு உடுக்கள் அணி சிரம் கண்டு கரங்குவித்து
அரவணைத்து ஆளுகின்ற அன்புக் கரம் பற்றி
பாசம் மொழி நெஞ்சத்தில் முகம் புதைத்து
அமைதி தேடி ஓடி உந்தன் மடியினிலே தலைவைத்து
அலகைமிதி தாமரைப் பதமலரில் சரணடைய
அனுதினமும் ஏங்குமுந்தன் சேயர் எமை
**அன்னை மரியே**
**அரவணைப்பாய் தாயே**

அனைவருக்கும் அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா வாழ்த்துக்களும்
பாரத அன்னையின் விடுதலைத் திருநாள் வாழ்த்துக்களும்.

# ஆகஸ்டு 15 ஓர் ஆனந்தப் பொன்னாள்

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

நமது அன்புத் தாய் அன்னை மரியா
உடலோடும் ஆன்மாவோடும்
விண்ணேற்பு அடைந்த பொன்னாள் - ஆகஸ்டு 15
நமது பாரத அன்னை அடிமை விலங்கறுத்து
விடுதலை பெற்ற நன்னாள் ஆகஸ்டு 15
திருச்சபை வரலாற்றில்
அன்னை மரியாவுக்கு விழா எடுத்த நாட்களை
சற்றுத் திரும்பிப் பார்ப்போம்
மரியா இறப்பு நினைவு நாள்- எனக் கீழைத் திருச்சபையில்
கி.பி. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து
திருநாளாகக் கொண்டாடப்பட்டது
மேற்கு ஐரோப்பாவில்
மரியாவின் விண்ணகப் பிறப்பு நாள் - என
கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்டது
மரியாவின் விண்ணேற்பு விழா – என இவ்விழா
கி.பி. 8-ஆம் நூற்றாண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள்
கொண்டாடப்படத் தொடங்கியது.
கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள்
இவ்விழா திருச்சபை முழுவதும் பரவியது.
முதல் வத்திக்கான் திருச்சங்கத்தில்
பங்கேற்ற 200 ஆயர்களும்
அன்னை மரியாவின் விண்ணேற்பை
விசுவாச சத்தியமாக பிரகடனம் செய்ய வேண்டுமென
திருத்தந்தையைக் கேட்டுக்கொண்டனர்
அவர்கள் வேண்டுகோளின்படி
அன்றைய திருத்தந்தை 12-ஆம் பத்திநாதர்
அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும்
விண்ணேற்பு அடைந்தார் -என்பதை
ஒரு விசுவாசக் கோட்பாடாக – சத்தியமாக வரையறுத்து
1.11.1950 அன்று பிரகடனம் செய்தார்.
இயேசுவின் பாடுகள் இறப்பு உயிர்ப்பு
என்னும் மீட்பின் மறைபொருளால்
இறப்பு என்பது மறுவாழ்விற்கு இட்டுச் செல்லும்
அருள் வாய்க்கால் என்பதை





ஆம் நாள் சுதந்திர தின விழாவைக் கொண்டாடுகையில் நமது நாட்டிற்காக, சமுதாயத்திற்காக, குடும்பங்களுக்காக நம்மை அர்ப்பணிக்கும் தியாகச் செயல்கள் புரிய தடையாக இருக்கும் அத்தனை காரணிகளையும் சீர்தூக்கிப் பார்ப்போம். உண்மைச் சுதந்திரம் மக்களை மையப்படுத்திய ஒரு அரசியல் உருவாக நமது ஒத்துழைப்பைத் தர அழைக்கிறது. நம்மை அடிமைப்படுத்தும் பொருட்கள், ஆட்கள், சூழல், சாதனங்கள் அனைத்தையும் இந்நாளில் சீர்தூக்கிப் பார்த்து முழு விடுதலைக்கான பாதையைத் தெரிவு செய்வோம். நம்முடன் இருப்பவர்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வைத் தருவோம்.

**விடுதலையை நோக்கிப் பயணித்த மரியா**

'நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்று வானதூதர் வழியாக இறைவனிடம் தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்தார். அவருடைய வாழ்வு அகத்திலும் புறத்திலும் விடுதலை உணர்வுகளால் ஏன் வேட்கையால் கூட நிறைந்திருந்தது. இறைவார்த்தையின் வழியாக இறைவனின் குரலைக் கேட்டார், பணிந்தார். 'கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை'' என்ற தாரக மந்திரம் அவர் உள்ளத்தில் ஆழமாக எழுதப்பட்டிருந்தது. சப்தமாக ஒலித்துக் கொண்டேயிருந்தது. விடுதலைப் பெண்ணாக, யாருக்கும் அஞ்சாமல், பிறர் என்ன நினைப்பார்கள் என்ற கோழை உள்ளத்தைத் துறந்து பணிவுடன், துணிவுடன் மீட்பின் வரலாற்றிற்குள் நுழைந்தார். அதன் ஒவ்வொரு நிகழ்விலும் முழுமையாக தன்னை ஈடுபடுத்தி விடுதலை நாயகன் இயேசுவின் ஒப்பற்ற சீடத்தியாக மாறினார். கானாவூரில் இரசம் தீர்ந்தபோது துணிவுடன் தனது மகனிடம் பரிந்துரை செய்தார். மகன் தயங்கினாலும் ஏழைத் திருமண வீட்டில் கவலை நிறைந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். பணியாளர்களிடம் 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று துணிவுடன் கூறினார். விண்ணரசின் புதிய இரசமாம் இயேசுவை நமக்கு அறிமுகப்படுத்திய புதுமைப்பெண் மரியா. இன்றும் இச்சொற்களை உதிர்த்துக்கொண்டேயிருக்கிறார். கல்வாரியில் ஆண் சீடர்களெல்லாம் ஓடி ஒழிந்தபோது அன்புச்சீடர், அன்பு சீடத்தியுடன் துணிவுடன் சிலுவையடியில் நின்று திருஅவையைப் பெற்றெடுத்தார். வியாகுலங்களால் நிறைந்த இதயத்தில் இறைவனுக்கு மற்றொரு பலிபீடத்தில் தன்னை நிவேதனம் செய்தார். 'உன் இதயத்தை ஒரு வாள் ஊடுருவும்'' என்ற சிமியோனின் இறைவாக்கு ஒவ்வொரு நிகழ்விலும் நிறைவேறி வர, அவர் ஊக்கம் பெற்றார். வைரம் பாய்ந்த நெஞ்சத்துடன் மிளிர்ந்தார். இந்த விடுதலைப் பெண் பாடிய புரட்சிக்கீதம் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆலயத்திலும், செப வழிபாடுகளிலும், இல்லங்களிலும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது.

**விடுதலைக் கீதம்**

பெண்களுள் பேறுபெற்றவர் எனவும் ஆண்டவரின் தாய் எனவும் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத்துவின் வாழ்த்தைக் கேட்டதும் மரியா பாடிய பாடலில் அவர் எத்தகைய புரட்சிக் கனலை தன் உள்ளத்தில் தன் இதயத்தில் சுமந்து கொண்டிருந்தார் என்பது புலனாகிறது. ஆம். தனது உதிரத்திலும், இதயத்திலும் புரட்சியாளர் இயேசுவைச் சுமந்த மரியா அவருடைய விழுமியங்களையும் சுமந்து கொண்டு யூத சமுதாயத்தில் வலம் வந்தார். ஐந்து வகையான புரட்சிகளை உள்ளடக்கியது இப்பாடல். 'உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரை சிதறடித்து வருகிறார்''. இத்தகையோர் இறைவனை அறியவும், அன்பு செய்யவும் முடியாது. இது ஒரு ஆன்மீகப் புரட்சி. இறைவனுக்கு அஞ்சி நடப்போருக்கு மட்டுமே அவர் இரக்கம் காட்டுவார். 'வலியோரை அரியணையிலிருந்து தூக்கி எறிந்துள்ளார்''. அதிகாரம், அநீதி, கண்டுகொள்ளாமை நிறைந்த ஆட்சி கவிழ்க்கப்படும். இது ஒரு அரசியல் புரட்சி. 'தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்''. இது ஒரு சமுதாயப் புரட்சி. தம்மைத் தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர். இவர்கள் சார்பாக இறைவன் இருந்து சமத்துவ சமுதாயத்திற்கு வழிகாட்டுவார். 'பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்''. இது ஒரு பொருளாதாரப் புரட்சி.

ஏழைகள், வறுமையுற்றோர், சமுதாயத்தின் விளிம்பிலிருந்து உழல்வோர் அனைவருக்கும் இறைவன் உணவு வழங்குவார். இறையாட்சி சமூகத்தில் பகிர்வு பெறும் விழுமியம் தூக்கி நிலை நிறுத்தப்படும். இறுதியாக இந்த ஒப்பற்ற விடுதலைக் கீதத்தை முழங்கிய நம் அன்னை, ஒரு யூதப் பெண்ணாக இருந்தும், இதைப் பாடி அன்றையப் பெண் அடிமைத்தனத்தை உடைத்ததால் இது ஒரு பண்பாட்டுப் புரட்சியுமாகும்.

**விண்ணேற்பு தரும் பாடம்**

அன்னை மரியா விண்ணகத்திற்கு எடுத்துச் சென்ற நிகழ்வு, பல பாடங்களை நமக்குக் கற்றுத் தருகிறது. அன்னையைப் போன்று இறைவார்த்தையை ஆழ்ந்து வாசித்து தியானித்து, அது மிகுந்த கனி தரும் வகையில் நமது வாழ்வை அமைத்துக் கொள்ளுதல் அவரைப் போன்று நமக்கு வரும் துன்பங்களை ஏற்று வாழ்வது தனது மகன் இயேசுவை, தந்தையின் திருவுளப்படி அறிவிலும் ஞானத்திலும் வளர்த்து, அவரோடு ஒன்றித்து வாழ்ந்தது போல நாமும் இயேசுவை நமது ஏக தேவையாக, பொக்கிஸமாகக் கொண்டு வாழ்வது மரியாவைப் போன்று நம்மை சூழ்ந்திருக்கும் மக்கள் மீது குறிப்பாக ஏழைகள் மீது அன்பும் அக்கறையும் கொண்டு வாழ்வது இறைவன் நமக்கு வகுத்திருக்கும் திட்டத்தை அவரின் அருள் கொண்டு முழுமையாக நிறைவேற்றுவது திருஅவையின் வளர்ச்சியில் திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் ஆர்வம் காட்டுவது, இந்த பரந்துபட்ட உலகில் அடிமைத்தனங்கள் ஒழிந்து, எங்கும் உண்மையான விடுதலைக் காற்று பரவிட செபிப்பது போன்ற நல்ல பாடங்களை கற்றுக் கொள்ளலாம். 'எங்கே மனதில் பயமின்றி தலை தான் நிமிர்ந்து நிற்கின்றதோ, அந்த சுதந்திர விண்ணகத்தில் என் தாய், என் நாடு விழித்தெழுக" என்று கீதாஞ்சலியின் ஆசிரியர் தாகூர் கூறுகின்றார். அன்னை மரியா தனது சொந்த இஸ்ரயேல் இனம், அரசியல், பொருளாதார, கலாச்சார, சமயக் கட்டுக்களிலிருந்து விடுதலை பெற ஏங்கினார். இந்த விடுதலையைக் கொண்டு வர இருந்த மீட்பருக்கு, மெசியாவுக்கு, தான் தாயாகும் பேற்றினை எண்ணி அகமகிழ்ந்தார். இறைவனைப் போற்றிப் பகழ்ந்தார். நாமும் ஒவ்வொரு நாளும் நற்கருணைப் பலியில் இறைவார்த்தையை கேட்டும், இறைவனை உண்டும் வருகின்றோம். இஸ்ரயேல் மக்கள் பெற்ற பாஸ்கா அனுபவம் நமது வாழ்விலும் ஒவ்வொரு நாளும் நிகழ வேண்டும். இறையாட்சியை முன்னிட்டு நாம் அனுபவிக்கும் சிலுவைகள், துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், புறக்கணிப்பு ஆகியவற்றை இயேசுவின் மனநிலை கொண்டு உயிர்ப்பின் அனுபவமாக மாற்ற அன்னை மரியா சென்ற வழியில் நாமும் நடை பயில்வோம் விடுதலை பெற்ற மக்களாக வாழ்வோம்.

**நிறைவுரை**

திருஅவை எதிர்காலத்தில் அடையவிருக்கின்ற மாட்சியின் முன்னடையாளமாக அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா திகழ்கிறது. இது இறைவன் அவருக்குக் கொடுத்த நிகரில்லா கொடை. அமல உற்பவியாக, அருள் நிறைந்தவராக, ஆன்மாவும் உடலும் அழியாமல் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மரியா, இறைவனின் கண்களில் பேறுபெற்றவராகத் திகழ்ந்தார். மரியா தனது சீடத்துவ வாழ்வால் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றி, பெண்களுள் பேறுபெற்றவராக விண்ணிலும் மண்ணிலும் ஒப்பற்ற அரசியாக, தாயாக மிளிர்கின்றார். திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும், துறவுவாழ்வை மேற்கொண்ட அனைவருக்கும் இறைவார்த்தை வழி, திருவருட்சாதனங்கள் வழி, மலைப்பொழிவு வாழ்வு வழி தூய ஆவியாரின் அருள் வரங்கள் மழையென பொழியப்படுகின்றன. இவ்வுலகின் வாழ்வை இழக்கும்போது மறுமையில் வாழ்வைக் கண்டு கொள்வோம். இடுக்கமான வாயில் வழியாக நுழைவோம். நாம் வாழும் இக்காலத்தை முற்றும் பயன்படுத்துவோம். இயேசு சொல்வதை செய்வோம் அவர் செய்ததை செய்வோம். இத்தகைய பயணம் விண்ணோக்கிச் செல்லும் பயணம். இப்புனித பயணத்தில் நமது சாட்சிய வாழ்வினால் நம்மோடு இருப்பவர்களையும் இணைத்துக்கொள்வோம். அப்போது திருஅவையில் புனிதம் மலர்ந்திடும் சமுதாயத்தில் மனிதம் மலர்ந்திடும். திருவெளிப்பாடு காட்டுகின்ற புதியதொரு விண்ணகத்தையும் புதியதொரு மண்ணகத்தையும் காண்போம்.





அன்னையின் அருள்வேண்டி இவ்வன்னையை நாடி வரத் தொடங்கினர். அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை ஜீவ மாதாவின் அருள் வேண்டி ஆராதனை. வேண்டுதல்கள், திருப்பலி மற்றும் பக்தர்களின் சாட்சியங்களோடு இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

நாளடைவில் பக்தர்கள் கூட்டம் அதிகமானதாலும் திருப்பலி முடிய காலதாமதம் ஆன படியாலும் பங்குத்தந்தை அருட்பணி ஜெகன் ம.ஊ.ச அவர்கள் ஜேப்பியார் கல்வி குழுமத்தை அணுகிய போது அவர்களும் தாயுள்ளத்தோடும், தாராள மனதோடும் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை ஜீவ மாதா நவநாளின்போது பக்தர்கள் அனைவருக்கும் மதிய உணவு அளிக்க சம்மதித்து இது நாள் வரையிலும் அப்பணியை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள்.
கொரோனா காலத்தில் பக்தர்களின் வருகை தடைபட்டதால் இரண்டு ஆண்டுகள் இந்த நவநாள் விழாவானது கொண்டாடப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின் கொரோனா காலம் முடிந்தபின் மீண்டும் பழைய புத்துணர்ச்சியோடு இந்நவநாளானது மீண்டும் கொண்டாடத் துவங்கப்பட்டது.

தற்போது இவ்வாலயத்தின் பங்குத் தந்தையாக இருக்கும் அருட்பணி கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச அவர்கள் பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற பின் அவரின் சீரிய முயற்சியினால் மென்மேலும் இந்த நவநாளானது மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் அருட்பணி ஜெகன் ம.ஊ.ச அவர்கள் 2009 - ல் ஜீவ மாதா நவநாள் தொடங்கப்பட்டபோது அருட்பணி கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச அவர்கள் இவ்வாலயத்தின் உதவி பங்குத் தந்தையாக பணியாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஜீவ மாதா நவநாள் தொடங்கிய காலம் தொட்டு இதுநாள் வரையிலும் பல தம்பதியர்கள் ஜீவ மாதாவின் அருளால் குழந்தை வரம் பெற்று இருக்கின்றனர் அது மட்டுமல்லாமல் அவர்களின் பல நிறைவேறாத தேவைகளும் ஜீவ மாதாவின் அற்புதத்தினால் நிகழ்ந்துகெண்டிருக்கின்றது என்பது நிதர்சனமான உண்மை.



# பொதுநிலையினரின் பார்வையில் மரியா ⑥

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### ஜீவ மாதா

ஜீவ மாதா, ஜீவனை சுமக்கும் மரியாள். பிறப்பிலேயே ஜென்ம பாவமில்லாமல் இறைவனின் சித்தப்படி இறைவனை சுமப்பதற்காக அவரின் திருஉளப்படி இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டவள் அவள். இறைவனை கருதாங்கிய காலத்திலே மிகச்சிரமப்பட்டு இறைவனை பெற்றெடுக்க இடம் கிடைக்காமல் ஊருக்கு ஒதுக்குப்புறத்திலே, மாட்டுத் தொழுவத்திலே, இறை இயேசுவை பெற்றெடுத்தது நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட மாதா, ஜீவ மாதா என்ற பெயர் கொண்டு சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள குழந்தை இயேசு ஆலயத்தில் குடி கொண்டிருக்கிறார். இக்குழந்தை இயேசு ஆலயத்தில் பங்கு தந்தையாய் இருந்த அருட்பணி சூசை மணி ம.ஊ.ச அவர்களால் 2002 - ஆம் ஆண்டில் இச்ஜீவமாதாவின் திரு உருவம் முதன் முதலாக இவ்வாலயத்தில் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப ஜீவ மாதா, பக்தர்களுக்கு இக்குழந்தை இயேசு ஆலயத்தில் இருந்து அருள் பாலித்து வந்தார். பின் 2009 - ஆம் ஆண்டு குழந்தை இயேசு ஆலயத்தின் பங்குத்தந்தையாக அருட்பணி ஜெகன் ம.ஊ.ச அவர்கள் பொறுப்பேற்ற பின் 2009 - ம் ஆண்டு ஆகஸ்டு மாதம், முதல் சனிக்கிழமை அன்று ஜீவ மாதாவின் நவநாள் விழா பங்கு மக்களின் பேராதரவோடு கொண்டாடத் தொடங்கப்பட்டது. தொடக்கத்திலே குழந்தை இயேசு ஆலய பங்கைச் சார்ந்த அன்பிய குழுக்கள் ஒன்றிணைந்து இவ்விழாவினை சிறப்பித்துக் கொண்டிருந்தார்கள். பின் அன்றிலிருந்து படிப்படியாக குழந்தை வரம் வேண்டியும் மேலும் பல வேண்டுதலுக்காகவும் பக்தர்கள் பலர் சிறிது சிறிதாக இவ்வாலயத்திற்கு வரத் தொடங்கினர். அதற்கடுத்தப்படியாக இம்மாதாவின் புகழும் அவரின் அற்புதங்களும் ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களிடையே பரவத் தொடங்கியது. அதற்குப்பின் இப்பங்கிலிருந்து மட்டும் அல்லாமல் மற்ற பிற பங்கில் இருந்தும் பின் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அதற்குபின் அண்டை மாநிலங்களில் இருக்கும் பக்தர்கள் பலரும் இச்ஜீவ மாதாவின் அற்புதத்தைக் கேள்வியுற்று பெருமளவில்





# அன்னையின் திருத்தலங்களை நோக்கி... ㊻

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## விண்ணேற்பு அன்னை திருத்தலம், மோன்.ஃ.பெர்ராத்தோ கிரேயா - இத்தாலி

ஆகஸ்டு மாதம் என்றவுடன் நம் அனைவரின் நினைவுக்கு வருவது அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழா. அன்னை மரியாள் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்ற விசுவாச சத்தியமானது திருத்தந்தை 12ஆம் பயஸ் அவர்களால் கி.பி. 1950ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி 'முனிபிசென்திசிமுஸ் தேயுஸ்' (MUNIFICENTISSIMUS DEUS) என்ற திருமடலின் வாயிலாக அறிவிக்கப்பட்டது. ஆனால், கிறிஸ்தவ விசுவாசிகளின் உள்ளத்திலும், அன்றாட வழிபாட்டு கொண்டாட்டங்களிலும் திருஅவையின் தொடக்க காலகட்டங்களிலிருந்தே இந்நிகழ்வானது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அன்னையின் விண்ணேற்பு குறித்த மறையுரைகளும், அன்னையின் விண்ணேற்பை மையப்படுத்திய பிரசித்தி பெற்ற ஓவியங்களும், விண்ணேற்பு அன்னைக்கு நேர்ந்தளிக்கப்பட்ட பேராலயங்களும், திருத்தலங்களும் திருஅவையில் வரலாற்றுக்குள் இழையோடிக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடியும். அத்தகைய திருத்தலங்களுள் ஒன்றுதான் மோன்.ஃ.பெர்ராத்தோ கிரேயாவில் அமைந்துள்ள விண்ணேற்பு அன்னை திருத்தலம். இத்திருத்தலத்திற்கு மேற்கொண்ட பயணம் ஒரு ஆழ்ந்த ஆன்மீக அனுபவமாக எனக்கு அமைந்தது. இயற்கை எழில் கொஞ்சும் இத்திருத்தலத்தைப் பற்றி ஆகட்டும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

வடஇத்தாலியில் மலைகளும், குன்றுகளும் அடங்கிய எழில்மிகு பிரதேசம் பியமொன்ந்தே மாநிலமாகும். இம்மலைப்பிரதேசத்தை மோன்.ஃ.பெர்ராத்தோ என்றழைக்கின்றனர். காண்போர் உள்ளத்தைக் கவரும் பள்ளத்தாக்குகளும், அடர்ந்த மரங்களடங்கிய வனப்பிரதேசமும், தொடர்ந்து வீசும் சில்லென்ற காற்றும் மனதிற்கும், உடலுக்கும் இதமாக அமைந்து மகிழ்ச்சியையும், நிறைவையும் தருகின்றன.

இப்பகுதியில் உள்ள உயர்ந்த குன்றுகளில் ஒன்றான கிரேயாவில் விண்ணேற்பு அன்னை திருத்தலம் அமைந்துள்ளது. நீண்ட நெடிய பாரம்பரிய கதைகளும், வரலாறும் இணைந்து விசுவாச வரலாற்றின் சாட்சியாக இத்திருத்தலம் விளங்குகிறது. வரலாற்றின் அடிப்படையில் இத்திருத்தலம்



மத்திய காலத்தை சார்ந்ததாகும். ஆனால், பாரம்பரியத்தின் அடிப்படையில் இத்திருத்தலத்தில் வணக்கம் செலுத்தப்படும் மரத்தாலான குழந்தை இயேசுவை கரங்களில் தாங்கியிருக்கும் அன்னையின் திருஉருவமானது புனித யூசேபியுஸ் அவர்களால் இங்கு கொண்டுவரப்பட்டதாக கருதப்படுகிறது.

பியமோன்ந்தே பகுதியில் கிறிஸ்தவ விசுவாசத்தை அறிவித்தவர்களுள் முக்கியமானவர் புனித யூசேபியுஸ் ஒருவராவார், இவர் கி.பி. 350 ஆம் ஆண்டில் இப்பகுதிக்கு வந்து அங்கிருந்த பழங்குடி இனத்தவரிடையே கிறிஸ்துவை அறிவித்து, அம்மக்களிடம் காணப்பட்ட பெண்தெய்வ வழிபாட்டை அன்னை மரியாளின் மீதுள்ள அபரிமிதமான பக்தியாக மாற்றினார்.

கி.பி. 1060ஆம் ஆண்டு பேரரசர் நான்காம் என்ரிகோ இப்பகுதியில் அமைந்திருந்த புனித பெனிஞ்ஞோ துறவற மடத்திற்கு சிறப்பு சலுகைகளை வழங்கினார். தொடர்ந்து வந்த காலங்களில் இங்கு புனித அகுஸ்தீனார் துறவிகளும் வசித்தனர். 12ஆம் நூற்றாண்டில் மோன்ந்தே∴பெர்ராத்தோ புகழ் பெற்ற திருத்தலமாக விளங்கிய காரணத்தினால், கி.பி. 1156ஆம் ஆண்டு திருச்சிலுவையின் ஒரு புனித பண்டமானது அங்கு கொண்டுவரப்பட்டு வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. இதிலிருந்து இந்த திருத்தலம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நம்மால் உணரமுடிகிறது.

பதிநான்காம் நூற்றாண்டில் பலேயோலிசி குடும்பத்தினர் இப்பகுதியை ஆளத்தொடங்கினர். கி.பி. 1372 மற்றும் கி.பி. 1418 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அங்கிருந்த ஆலயத்தின் ஒரு பகுதியில் அந்தியோக்கிய நகரைச் சார்ந்த புனித மார்கரித்தாவுக்கு ஒரு சிற்றாலயம் எழுப்பினர். அச்சிற்றாலயத்தின சுவர்களில் புனிதையின் வாழ்க்கை வரலாற்றையும் அதிலும் குறிப்பாக அவரது வேதசாட்சிய மரணத்தை குறிக்கும் நிகழ்வையும் தத்ரூபமாக வரைந்து இறைமக்களின் உள்ளத்தில் விசுவாச வாழ்விற்காக இன்னுயிரை தருதல் எவ்வளவு மேலானது என்பதை குறித்த சிந்தனைகளை பரப்பினர்.



பலேயோலிசி குடும்பத்தின் ஆட்சி முடிவுக்கு வரவே கொன்சாகா குடும்பத்தினரிடம் அப்பகுதியின் ஆட்சி அதிகாரம் வந்தது. கி.பி. 1589 ஆம் ஆண்டு முதலாம் வின்சென்சோ கொன்சாகாவின் ஆட்சி காலத்தில் மோன்∴பெர்ராத்தோ ஆலயமானது விரிவுபடுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. ஆலய பணிகள் நிறைவுற்றவுடன் பல்வேறு





விசுவாசத்தால் உயிரூட்டப்பட்ட ஆய்வறிவால் குறைநிறை ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

மரபுகளும் அவ்வாறே மாறுபவையே, வளருபவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் அல்லது பண்பாட்டில் மரியாள் மீதான பக்திக்கு ஏற்ற வெளிப்பாடுகளாக இருந்த சிறப்புப் பெயர்களும், வணக்க முறைகளும், எல்லாக் காலத்திற்கும், கலாச்சாரங்களுக்கும் ஏற்றவை என நாம் கூற இயலாது. மாறிவரும் மக்கள˙ மனநிலைக்க ஏற்ப இவை மாறிவிடுகின்றன. மாறவும் வேண்டும். ஒரு காலத்து மக்களுக்க 153 மணி ஜெபமாலை சிறந்த பக்தி முயற்சி என்பதால் எல்லா காலத்து மக்களுக்கும் அதுவே ஏற்ற பக்தி செயல்முறை என கூறமுடியாது. ஒரு காலத்து மக்கள் உத்திரியம் அணிவதின் வழியாக மரியா பக்தியை வெளிப்படுத்தினார்கள் என்பதால் எல்லோரும் எப்போதும் அதே முறையில் பக்தியை வெளிக் காட்ட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ஆம் மரபு வாய்ப்பாடுகளும் வாழ்த்து மொழிகளும் வணக்கங்களும் பக்தி வெளிப்பாடுகளும் இன்றைய இந்திய, தமிழ மக்களுக்கு எந்த அளவுக்கு மரியாவின் வாழ்வின் பொருளை உணர்த்துபவை என இங்குள்ள கத்தோலிக்கம் எண்ணிப் பார்க்க வேண்டும் காலத்திற்கு பண்பாட்டிற்கு ஏற்ப புதுப்புது மொழிகள், முறைகள் தோன்ற வேண்டும். அவை அனைத்துமே விவிலிய அடிப்படையில் விசுவாச மதிப்பீட்டாய்விற்கு உள்ளாக்கப் பெற்றே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

ஆம் விளக்கின் அடியிலே இருட்டும் இருப்பதுபோல, பக்தி உணர்ச்சி மரபு என்னும் போர்வையில் சில வேளைகளில் பல மூட நம்பிக்கைகளும் குருட்டுப் பழக்கவழக்கங்களும˙ வந்து புகுவதுண்டு. எனவே மரபுகள் எல்லாம் உண்மையான விசுவாச மரபுகளல்ல. பக்திமுயற்சிகள் எல்லாம் உண்மையான பக்தியின் வெளிபபாடுகள் அல்ல. இதனால்தான் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் மரியா வணக்கம் பற்றி தெளிவாக பின்வருமாறு கூறுகின்றது. “மெய்யான இறைப்பற்று, பொருளற்றதும், தோன்றி மறைவதுமான உணர்ச்சிகளாலோ அல்லது ஒரு வகையான குருட்டு நம்பிக்கையிலோ அடங்குவதில்லை. மாறாக உண்மையான விசுவாசத்திலிருந்தே பிறக்கின்றன. (திருச்சபை 67)

அதில் மறைந்துள்ளதை வெளிப்படுத்துபவை என்னும் வகையில்தான் திருத்தந்தையர், இறையியல் வல்லுநர் இவர்களுடைய சிந்தனைக் கூற்றுகளும் , ஆசிரியக் கூற்றுகளும் அர்த்தம் பெறுகின்றது. அதனால்தான் வத்திக்கான் சங்கமும் மரியாவைப் பற்றிய தனது படிப்பினைகளில் விவிலியத்திற்கே முதலிடம் தந்து, மரியாவை இயேசுவின் அன்னையாக, நம்பிக்கையில் இயேசுவின் தலைசிறந்த சீடராக, அதனால் திருச்சபையின் மாதிரியாகக் காட்டுகிறது. இந்த விவிலிய கண்ணோட்டத்திற்கு எதிராக உள்ள பல மரபியல் மரபுச் சிந்தனைகளையும், சிறப்புப் பெயர்களையும் சங்க போதனைகள் கவனமாக தவிர்க்கவும் செய்கிறது.

இவ்வாறு, அண்மை கால மரபில் முக்கியத்துவம் பெற்றிருந்தும் வத்திக்கான் சங்கத்தால் விடப்பட்ட மரியாவின் சிறப்பு பெயர்களில் "அனைத்து வரங்களின் மத்தியஸ்தி (Mediatrix of all graces) துணை இரட்சகி (co- redemptrix) போன்றவையாகும்.

மேலும் அண்மை கால மரியாள் வணக்கத்தையும் போதனையும் பெரிதும் பாதித்துள்ளவை, இன்னும் தொடர்ந்து பாதித்துக் கொண்டிருப்பவை, மரியாவின் காட்சி அனுபவங்கள் என உறுதியாகச் சொல்லலாம். இக்காட்சி அனுபவங்களைப் பற்றி திருச்சங்கம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாதது ஆழ்ந்த அர்த்தமுள்ள ஒரு மௌனமாகும். சங்கக் கண்ணோக்கின்படி மரியா வணக்கமும் சிந்தனையும் , இத்தகைய காட்சி அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அமையலாகாது. மாறாக, காட்சியனுபவங்களில் காட்சி காண்பவரின் சொந்த கற்பனைகளும், அவரது சமூக கலாச்சார குறைபாடுகளும் பொதுவாக உண்மையுடன் கலந்தே கிடப்பதால் எந்த காட்சி அனுபவத்தையும் செய்தியையும் அப்படியே இறைவாக்கு என நாம் ஏற்றுக் கொள்வது முறையாகாது. மாறாக, இத்தகைய காட்சி அனுபவங்களும் அவற்றில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் செய்திகளும் அவற்றை ஆரம்பமாகக் கொண்டு தோன்றி வளர்ந்துள்ள வணக்க முறைகளும் விவிலிய விசுவாச அடிப்படையில் ஆழ்ந்த குறைநிறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அதுபோல பெறும் பக்தியுணர்விலும் அல்லது மரபுகளின் அடிப்படையிலும் மரியா வணக்கமும் சிந்தனையும் வளர்ந்து விடக்கூடாது. வெறும் உணர்ச்சியாக இருந்தால் பக்தியுணர்ச்சியும் மேலோட்டமானதே. இது இன்று இருக்கும் நாளை மறைந்துவிடும். உண்மையான நம்பிக்கையின் அடிப்படையில் அது ஆழ வேரூன்றி நிற்கவில்லையென்றால் அதிலிருந்து எளிதில் மூட நம்பிக்கைகள் முளைத்துவிடலாம். எனவே மரியா பக்தியில் வடிவங்களும் விவிலிய








சிற்றாலயங்களையும், அன்னை மரியாள் மற்றும் புனிதர்களின் ஓவியங்களையும் உள்ளடக்கியதாக ஆலயம் அமைந்தது.

இக்காலக்கட்டத்தில் அத்துறவற மடத்தின் தலைவராக இருந்த அருட்பணி. கொஸ்தான்தினோ மஸ்ஸினியின் உள்ளத்தில் 'வரால்லோ புனித மலையில்' கட்டி முடிக்கபடவிருந்த அற்புதமான சுரூபங்களையும், சுவரோவியங்களையும் உள்ளடக்கிய சிற்றாலங்களை முன்மாதிரியாகக் கொண்டு, அன்னையின் வாழ்க்கையை தியானிக்கும் வண்ணமாக, அவரது விசுவாச வாழ்வின் நிகழ்வுகளை எடுத்தியம்பும் சிற்றாலயங்களை நிர்மாணிக்கும் எண்ணம் எழுந்தது. அவருடைய எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில் அன்னையின் வாழ்க்கை நிகழ்வுகளோடு, செபமாலையின் மறையுண்மைகளை உள்ளடக்கியதாக 18 சிற்றாலயங்களை எழுப்ப திட்டம் உருவானது. சிற்றாலய பணிகள் தொடங்கப்பட்டு முதலில் அன்னையின் பிறப்பு மற்றும் அவர் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிகழ்வுகளை சித்தரிக்கும் சிற்றாலங்கள் கட்டப்பட்டன. கி.பி. 1598ஆம் ஆண்டில் 10 சிற்றாலயங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அருட்பணி. கொஸ்தான்தினோவுக்கு பின் இல்லத்தின் தலைவராக பொறுப்பேற்ற அருட்பணியாளர், அவரது திட்டத்தை இன்னும் விரிவாக்கி 40 சிற்றாலயங்களை எழுப்ப திட்டம் கொண்டார். ஆனால், அத்திட்டம் நிறைவேறவே இல்லை. 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் 18 சிற்றாலயங்களும், பல்வேறு புனிதர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 17 செபநிலைகளும் இருந்தன. கி.பி. 1657ஆம் அண்டு பிரெஞ்ச் படைகள் தொடுத்த போரில் இச்சிற்றாலயங்களில் பல சிதிலமடைந்தன.

கி.பி. 1735ஆம் ஆண்டு பரோக் கட்டிட கலையில் ஆலயத்தின் முகப்பு புதிப்பிக்கப்பட்டது. இன்றளவும் இம்முகப்பானது நிலைத்திருந்து காண்போரின் உள்ளங்களை விண்ணகம் நோக்கி எழுப்புவதாக அமைந்துள்ளது.

கி.பி. 1801ஆம் ஆண்டு துறவற சபைகளை பிரெஞ்ச் பேரரசர் நெப்போலியன் தடைசெய்தார். அவருடைய படைகள் ஆலயங்களையும், துறவற மடங்களையும் தாக்கி பல்வேறு கலைப்பொருட்களைக் கைப்பற்றி எடுத்துச் சென்றன. அதில் மோன்ந்தேபெர்ராத்தோவும் அடங்கும். இத்தாக்குதல்களினால் இப்புனித மலையில் அமைக்கப்பட்டிருந்த சிற்றாலயங்கள் முற்றிலுமான அழிந்துபோயின எனலாம்.

ஆட்சிகள் மாறின, காட்சிகளும் மாறின. கி.பி. 1859ஆம் ஆண்டு 'புனித மலை புனரமைப்பு குழு' அமைக்கப்பட்டது. கிரேயா புனித மலையின் புகழ்வாய்ந்த பழைய பாரம்பரியத்தை மீட்டெடுக்க இக்குழு முடிவெடுத்தது. பல்வேறு நல்உள்ளங்களின் உதவியினாலும், உழைப்பினாலும் 23 சிற்றாலயங்களும், 5 புனிதர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட செபநிலைகளும் கட்டப்பட்டு, கி.பி. 1889 ஆம் ஆண்டு அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டன.



இவற்றில் முக்கியமானது அன்னையின் விண்ணேற்பு நிகழ்வை சித்தரிக்கும் 'விண்ணுலகின் சிற்றாலயம்' (Capella del Paradiso) ஆகும்.

'விண்ணுலகின் சிற்றாலயத்தின்' உட்புற மேற்கூரையில் வானதூதர்கள் புடைசூழ, புனிதர்களும், திருத்தந்தையர்களும் உடனிருக்க விண்ணுலகை அடைந்த அன்னைக்கு நம் மீட்பராம் இயேசுவும், தந்தையாம் கடவுளும் அவருக்கு விண்ணக, மண்ணக அரசியாக முடிசூடும் காட்சியானது ஓவியமும், புடைசிற்பமும் கலந்து அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

அடர்ந்த காடுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் மத்தியில் அமைந்துள்ள இப்புனித மலையில் ஆலயத்தை தரிசித்துவிட்டு, அங்கு வியாபித்திருக்கும் அமைதியில் இந்த சிற்றாலயங்களை தரிசிப்பது என்பது ஒரு ஆழ்ந்த இறையனுபவமாகவே உள்ளது. 'விண்ணுலகின் சிற்றாலயம்' நோக்கி நாம் மலைச்சரிவில் நடக்கும் போது பின்வரும் சிற்றாலயங்களையும், செபஇடங்களையும் தரிசிக்கும் பேறுபெறுகிறோம்.

1. புனித யுசேபியுஸின் மறைசாட்சிய இறப்பு
2. புனித யுசேபியுஸின் அடக்கம்
3. இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்பட்ட அன்னை மரியா
4. அன்னை மரியா அவரது தாயின் கருவில் உருவாதல்
5. அன்னை மரியாவின் பிறப்பு
6. அன்னை மரியா கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்படல்
7. அன்னை மரியாவின் திருமணம்
8. இயேசு பிறப்பு அன்னைக்கு அறிவிக்கப்படல்
9. அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்தல்
10. இயேசுவின் பிறப்பு
11. இயேசு ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்படல்
12. இயேசு ஆலயத்தில் அறிஞர்களுடன் விவாதித்தல்
13. இயேசு கெத்தமனி தோட்டத்தில் செபித்தல்
14. இயேசு கசையால் அடிக்கப்படல்
15. இயேவுக்கு முள்முடி சூட்டப்படல்
16. இயேசு சிலுவை சுமத்தல்
17. கானவூர் திருமணம்







# மரியா - கடவுளின் கடிதம்



25

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா
## உண்மை மரியாவா? கற்பனை மரியாவா?

மரபு மரியா வணக்கத்திலும் மரியியல் சிந்தனைகளிலும் கலந்துவிட்ட கற்பனைப் புணர்வுகளைக் களைந்து மரியாவின் உண்மை உருவை மக்கள் மனதில் பதிக்க முயன்று இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் துவக்கக் காலத்து திருமுறை புறநூல்கள், ஏனைய சமய பெண் தெய்வ வழிபாடுகள், இடைக்காலத்து மூடநம்பிக்கை சூழமைவு அண்மைக் கால பக்தி மிகைப் படுத்துதல்கள் போன்றவற்றின் தவறான மரியியல் பாதிப்புக்களைத் தவிர்த்து, உண்மை கிறிஸ்துவ நம்பிக்கையில் மரியாவைப் பற்றிக் கொள்ள வேண்டும் என திருச்சங்கம் எடுத்துரைக்கிறது. இறையியலாரும் இறைவாக்கைப் போதிப்பவரும் இறைவனின் தனிச்சிறப்பான மாண்பு பற்றி பேசும் போது, தவறான மிகைக் கூற்றுகளையும், மிக குறுகிய நோக்கையும் கவனத்துடன் தவிர்க்கும்படி (திருச்சபை 67) சங்கம் அவர்களை எச்சரிக்கின்றது. இதுபோல மரியா மீதான மெய்யான பற்று "உண்மை விசுவாசத்திலிருந்து பிறக்கின்றது" (திருச்சபை 67) என எல்லா விசுவாசிகளுக்கும் எடுத்துரைக்கிறது.

உண்மையான விசுவாசம் காட்டும் மரியாவை மனதில் பதித்தே மரியா பக்தியும் சிந்தனையும் வளர வேண்டும் என்றால் அந்த உண்மை விசுவாசத்தின் மரியாவை நாம் எங்கே காண்பது எனும்கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கும் சங்கமே விடையளிக்கவும் செய்கின்றது. "ஆசிரியத்தின் மேற்பார்வையில் அவர்கள் திருமறை நூல், திருத்தந்தையர்கள், மறைநூல் வல்லுநர்கள், திருச்சபையின் வழிபாட்டு முறைகள் பற்றிய ஆராய்ச்சியை வளர்த்து தூய கன்னியின் அலுவல்களையும் சிறப்பு உரிமைகளையும் வரிவர விளக்க வேண்டும். (திருச்சபை, 67) ஆம் உண்மை மரியா வணக்கமும் சிந்தனையும் விவிலியம் , திருதந்தையர், இறைநூல் வல்லுநர், திருவழிபாட்டு மரபு , திருச்சபை ஆசிரியம் இவற்றின் வழிநின்று வளர்ந்தவையாக இருக்க வேண்டும். இவற்றுள் முதன்மையும் மிக முக்கியமும் ஆனது விவிலியம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர். விவிலிய வழி வளர்ந்த விசுவாசத்தை விளக்குபவை அல்லது



# முத்திப்பேறு அந்திரேயா தோத்தி OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

முத்திப்பேறு அந்திரேயா தோத்தி சுமார் 1256 ஆம் ஆண்டு போர்கோ சன் செபோல்க்ரோ என்கிற ஊரில் பிறந்தார். இவர் தோத்தி என்கிற உயர் வர்க்க பணக்கார (Nobile family) குடும்பத்தை சார்ந்தவர். 1278 ஆம் ஆண்டு இவர் பிறந்த ஊரில் மரியின் ஊழியர் சபையின் பொதுப்பேரவை (General Chapter) நடைபெற்றது. அன்று சபையின் அதிபராக இருந்த புனித பிலிப்பு பெனிசி, இந்த பேரவையை தலைமை தாங்கி வழிநடத்தினார். அக்காலத்தில் பொதுமக்கள், இத்தகைய முக்கியமான பேரவைகளின் திருவழிப்பாட்டு சடங்குகளில் பங்கேற்பார்கள். இவ்வாறு ஒரு திருவழிப்பாட்டின் மறையுரையின் போது, புனித பிலிப்பு பெனிசி எவ்வாறு மீட்பை பெற்றுக்கொள்வது என்பது பற்றி பேசத் தொடங்கினார். இதன் ஒரு பகுதியில் செல்வந்த இளைஞரிடம், இயேசு நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும் (மத்தேயு 19:21) என்று கூறியதை நினைவூட்டினார். இந்த இறைவார்த்தை முத்திப்பேறு அந்திரேயா தோத்தியின் உள்ளத்தை ஊடுருவியது. எனவே, அவரும் அனைத்தையும் விட்டுவிட்டு மரியின் ஊழியர் சபையில் சேர்ந்தார். இவருடைய புனித வாழ்க்கையைக் கண்டு, இவருக்கு இரண்டே ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்த முடிவு செய்தனர். இதன்படி 1280 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தனது சொந்த ஊருக்கு திரும்பி, ஆன்மிகப் பணியில் ஈடுபட்டார். தனது சொந்த ஊரில் மட்டுமில்லாமல் பல ஊர்களுக்கு சென்று புனித பிலிப்பு பெனிசியிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த மறையுரை ஆற்றும் பணியை மேற்கொண்டார். தன்னுடைய இறுதிக் காலத்தில் தன்னுடைய சொந்த ஊரில் உள்ள மரியின் ஊழியர் சபையின் மடத்தில் வாழ்ந்தார். இவருடைய புனித வாழ்க்கையின் மூலம் ஒரு சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார். தன்னுடைய சிறிய அறையில் எப்போதும் செபம் செய்து கொண்டே இருப்பார். இவ்வாறு 1315 ஆகஸ்ட் 31 ஆம் நாள் அவர் செபத்தில் இருந்தபோதே அவர் இறைவனடி சேர்ந்தார். உயிர் பிரிந்த பின்பும் அவர் முழங்காலிட்டபடியே இருந்ததை சக சகோதரர்கள் கண்டார்கள். இவருடைய உடல், இவருடைய சொந்த ஊரில் உள்ள மரியின் ஊழியர் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. 1806 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் திருத்தந்தை ஏழாம் பத்திநாதர் இவருக்கு முத்திப்பேறு பட்டம் அளித்தார்.







18. இயேசு சிலுவையில் அறையப்படல்
19. இயேசுவின் உயிர்ப்பு
20. இயேசு விண்ணேற்றமடைதல்
21. அன்னை மரியா மற்றும் திருத்தூதர்கள் மேல் தூய ஆவியாரின் வருகை
22. அன்னையின் விண்ணேற்பு
23. அன்னை மரியாள் விண்ணக, மண்ணக அரசியாக முடிசூடப்படல்

**புனிதர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட செபநிலைகள்**

1. புனித லூக்கா
2. புனித பிரான்சிஸ்
3. புனித ரோக்கோ
4. வியாகுல அன்னை
5. துறவிகளின் கல்லறை

மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சிற்றாலயத்திலும், செபநிலைகளிலும் ஆளுயர சுரூபங்களும், மேற்கூரை மற்றும் பக்கவாட்டு சுவர்களில் விவிலிய நிகழ்வுகளையும், புனிதர்களின் வாழ்வையும் சுட்டிக்காட்டும் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன் வாகன வசதிகளே இல்லாத அக்காலத்தில் இம்மலைப்பகுதிக்கு எங்ஙனம் கட்டுமான பொருட்களை எடுத்துச் சென்றனர், அதிலும் குறிப்பாக அடர்ந்த பனிபிரதேசமான இப்பகுதியில் ஆண்டில் 5 மாதங்களுக்கு மேல் பனியும், குளிரும் மிகுந்த இடத்தில் எப்படி இவையெல்லாம் சாத்தியமானது என்பதே வியப்பாக உள்ளது.

வியப்போடு உற்றுநோக்கும் நம் உள்ளத்தில் இயேசுவின் காலியான கல்லறையை காணும் பெண்களுக்கு வானதூதர் கூறும் வார்த்தைகள் எதிரொலிக்கின்றன: 'நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கு இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்." (மத் 28: 5-6).

திருஅவைத் தந்தையர்களும், மறைவல்லுனர்களும், புனிதர்களும் அன்னையின் விண்ணேற்பை குறித்து பல நூற்றாண்டுகளாக போதித்தும், எழுதியும் வந்துள்ளனர். கி.பி. 590ஆம் ஆண்டு தூர்ஸ் நகரை சார்ந்த புனித கிரகோரி கூறிய, "அன்னை மரியாள் தன் இவ்வுலகை வாழ்வை முடித்தவுடன் அவரது உடலானது, ஆண்டவரின் திட்டப்படி வானகங்களுக்கு மேல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது" என்கிற வார்த்தைகள் நம் நினைவில் கொண்டு நாமும் ஒருநாள் அன்னையோடு விண்ணக மகிமையில் பங்கேற்போம் என்கிற நம்பிக்கையில், மகிழ்வோடு அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவை கொண்டாடுவோம். அனைவருக்கும் செபங்களும், வாழ்த்துக்களும்.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருவெளிப்பாடு



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | | | | | | 1 |
| | 6 | | | | | | | 5 | |
| | | 10 | | | | | 9 | | |
| | | | | | X | X | | | |
| | | | | | X | X | | | |
| | | | | 13 | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | 11 | | | | | | | |
| | 8 | | | | | | | 7 | |
| 4 | | | | | | | | | 2 |

வலமிருந்து இடம்

1) ................ னகரமும் நானே என்கிறார் கடவுளாகிய ஆண்டவர். இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவரும் அவரே

2) நூலைத் ............ படிக்க விண்ணுலகிலோ மண்ணுலகிலோ கீழுலகிலோ இருந்த எவராலும் இயலவில்லை.

5) மற்றொரு வானதூதர் பொன் தூபக் கிண்ணம் ஏந்தியவராய்ப் பலிபீடத்தின் .......... வந்து நின்றார்.

7) ...........பாலைநிலத்துக்கு ஓடிப்போனார்: அங்கு ஆயிரத்து இருநூற்று அறுபது நாள் அவரைப் பேணுமாறு கடவுள் அவருக்கென ஓர் இடத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

9) நான்காம் வானதூதர் தம் கிண்ணத்தில் இருந்ததைக் கதிரவன்மீது ஊற்றினார். ........மனிதரை நெருப்பாய் எரிக்கும் வன்மையை அது பெற்றது.

இடமிருந்து வலம்

3)எங்கள் ஆண்டவரே, எங்கள் கடவுளே, மாட்சியும் மாண்பும் வல்லமையும் பெற நீர் தகுதி பெற்றவர்: ஏனெனில் ............ படைத்தவர் நீரே. உமது திருவுளப்படியே அவை உண்டாயின, படைக்கப்பட்டன் என்று பாடினார்கள்.

4) பின் ............ வேறொரு வானதூதர் விண்ணகத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன். அவர் மேகத்தை ஆடையாக அணிந்திருந்தார்.

6) ஏழாம் வானதூதர் எக்காளம் முழக்கப்போகும் .......... கடவுள் தம் பணியாளர்களான இறைவாக்கினர்களுக்கு அறிவித்திருந்தபடியே அவரது மறைவான திட்டம் நிறைவேறும்' என்றார்

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-08-2023**





எவரையும் ஏமாற்றாதவர் என்னும் நம்பிக்கை வாழ்வில் இடம் பெறுவதையும், அதன் பயனாக தொடர்ந்து ஆண்டவரின் பணியை செய்தார்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

புனித பவுல் கிறிஸ்தவன் வாழ வேண்டிய நெறி முறைகளை இன்றைய வாசகத்தில் கூறுகிறார். மனிதன் வெறும் உடலுமன்று அருமையான ஆன்மாவுமன்று, உடல் ஆன்மாவின் இணைப்பே முழு ஆள். முழு மனிதனும் இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணமாக்கப்பட்டு மீட்புப் பெற வேண்டும் என்கிறார் புனித பவுல். இறைவனுக்கு ஆன்மீக வழிபாடு செய்ய விரும்புபவன் பழைய பாவ வாழ்வை உதறித் தள்ளிவிட்டு, புது வாழ்வில் இணைய வேண்டும் என்ற அழைப்பை ஏற்று இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் , இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் போதனைகளை வாழ்வாக்கி, அவரது பாடுகளுக்கும், உயிர்ப்புக்கும் சாட்சிகளாக வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, தனிமையிலும், முதுமையிலும் , துன்பத்திலும், நோயிலும் வாழுகின்ற மனிதர்களுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் தருகின்ற கருவிகளாக வாழ்ந்திட எங்களுக்கு துணைபுரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா எங்களது கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் வருகின்ற எதிர்ப்புகளையும் சவால்களையும் போராட்டங்களையும் கண்டு மனம் நொடிந்துவிடாமல் உறுதியோடும் நம்பிக்கையோடும் மனதிடத்தோடும் இறைவனுக்கும் அவரது போதனைகளுக்கும் சாட்சிகளாக வாழ்ந்திட அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா கிறிஸ்தவ விசுவாச நிமித்தமாக துன்பப்படுகின்ற இறை ஊழியர்களுக்காகவும், இறை மக்களுக்காகவும் ஜெபிக்கின்றோம். நீர் அவர்களது மத்தியில் பிரசன்னமாக இருந்து அவர்களது விசுவாதத்தை உறுதிப்படுத்தி அவர்களை எல்லா தீமைகளிலிருந்தும் வன்முறைகளிலிருந்தும் பாதுகாத்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா உமது தெய்வீக பிரசன்னத்தை ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையிலும் நற்கருணையிலும் கண்டு அவ்விறை விசுவாசத்தின் சாட்சிகளாக வாழ்ந்து உமது மாட்சிமையில் நாங்களும் பங்கு பெற எங்களுக்கு அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 22 ம் ஞாயிறு**

**எரே 20 :7-9 உரோ 12 :1-2 மத் 16 : 21-27**

**முன்னுரை**

இயேசுவுக்காக நம் வாழ்வை பகிர நாம் அனைவரும் நம் திருமுழுக்கின் வழியாக அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய மூன்று வாசகங்களும் இதைத்தான் மிகவும் தெளிவாக நமக்கு வெளிப்படுத்துகின்றன. துன்பங்களின் வழியாகவே வாழ்வை வழங்கிய நம் இறைவன் நமக்கு விடுக்கும் அழைப்பு "என்னைப் பின்பற்ற விரும்பும் அனைவரும் தன்னை மறுத்து , தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைத் தொடரட்டும். மனிதருக்கு ஏற்றவைகளை அல்ல, மாறாக கடவுளுக்கு ஏற்றவைகளையே எண்ண வேண்டும் என்கிறார் இயேசு. உலக விருப்புகளைவிட்டு , துன்பங்களை பொறுமையாக ஏற்று தந்தையை மாட்சிப்படுத்த அழைப்புவிடுக்கின்றது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. கடவுளின் திட்டப்படி வாழ்ந்தால் நிலைவாழ்வு பெறலாம் என்ற உறுதிமொழியை இயேசு தருகின்றார்.

துன்பங்களை பொதுவாக ஏற்றுக் கொள்வது , அதற்கு தடையான உலக சோதனைகளை விலக்குவது, மற்றும் அதற்கு துணையாக கடவுள் மேல் நம்பிக்கை வைப்பது. போன்றவை கிறிஸ்துவ சீடத்துவ வாழ்வின் வழிமுறைகள் என்கின்றது இன்றைய வாசகங்கள். எனவே நமது அனுதின வாழ்வில் துன்பங்களை ஏற்போம். கடவுளின் திட்டத்தால் மறுவாழ்வைப் பெறுவோம். இதைத்தான் யோபு புத்தகத்தில் யோபு மிக அழகாக சொல்லுகிறார்"கடவுளிடத்தில் இன்பங்களையும், வரங்களையும் பெற்ற நாம் , ஏன் சில துன்பங்களைப் பெறக் கூடாது" எனவே துன்பத்தை பொறுமையாக ஏற்றுக் கொள்ளக் கூடிய துணிவும் மனவலிமையும் வேண்டி செபிப்போம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

கடவுளின் சிறப்பான அழைப்புப் பெற்றவர்கள் மற்றவர்களைவிட அதிகம் துன்புறுகின்றனர். இன்றைய முதல் வாசகத்தில் பல்வேறு துன்பங்களுக்கு இலக்கான இறைவாக்கினர் எரேமியா கடவுளிடம் பின்வருமாறு முறையிடுகிறார். 'ஆண்டவரே நீர் என்னை ஏமாற்றி விட்டீர், நானும் ஏமாந்து போனேன். எனினும் இறைவன் நல்லவர்





8) 15:8 கடவுளின் மாட்சியும் வல்லமையும் கோவிலைப் புகையால் நிரப்பின.......... அந்த ஏழு தூதர்களும் கொண்டிருந்த ஏழு வாதைகளும் முடிவுறும்வரை ஒருவரும் கோவிலுள் நுழைய முடியவில்லை.

10) 19:10 நான் வானதூதரை வணங்கும் பொருட்டு அவரது காலடியில் விழுந்தேன்........ அவரோ என்னிடம், வேண்டாம். இயேசுவுக்குச் சான்று பகர்ந்த உனக்கும் உன் உடன்பிறப்புகளுக்கும் நான் உடன்பணியாளனே.

11) இந்த நூலில் உள்ள இறைவாக்குகளைக் கேட்போர் .......... யோவானாகிய நான் எச்சரிப்பது யாதெனில்:

12) பின்பு நான் அரியணைகளைக் கண்டேன். தீர்ப்பளிக்கும் ......... பெற்றிருந்த சிலர் அவற்றின்மீது வீற்றிருந்தனர்.

13)இறந்தோருள் சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரும் அந்த அரியணைமுன் நிற்கக்
.......... அப்பொழுது நூல்கள் திறந்து வைக்கப்பட்டன

**மேலிருந்து கீழ்**

1) நீ எங்குக் குடியிருக்கிறாய் என நான் ....... அங்கேதான் சாத்தானின் அரியணை உள்ளது.

3) அப்பொழுது சிவப்புக் குதிரை ஒன்று வெளியே வந்தது. அதன்மேல் ஏறியிருந்தவருக்கு, உலகில் அமைதியைக் குலைக்க .......... கொடுக்கப்பட்டது:

5)அக்காலத்தில் மனிதர் சாவைத் தேடுவார்கள்: ஆனால் சாக மாட்டார்கள். சாக விரும்புவார்கள்: ஆனால் சாவு அவர்களை ..........

6) பின் வலிமைமிக்க வேறொரு வானதூதர் விண்ணகத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன். அவர் மேகத்தை ஆடையாக அணிந்திருந்தார். அவரது தலைக்குமேல் ஒரு வானவில் இருந்தது: அவரது முகம் கதிரவன்போலவும் .......... நெருப்புத் தூண்கள்போலவும் இருந்தன.

9) ......... பாவங்கள் வானைத்தொடும் அளவுக்குக் குவிந்துள்ளன: கடவுள் அவளின் குற்றங்களை நினைவில் கொண்டுள்ளார்.

10) இறந்த ஏனையோர் அந்த ..........ஆண்டுகள் முடியும்வரை உயிர் பெறவில்லை. இதுவெ முதலாம் உயிர்த்தெழுதல்.

**கீழிருந்து மேல்**

2) நான் யார் மீது அன்பு செலுத்துகிறேனோ அவர்களைக் கடிந்து தண்டித்துத் ............

4) ஆமென், புகழ்ச்சியும் பெருமையும் ஞானமும் நன்றியும் மாண்பும் .......... வலிமையும் எங்கள் கடவுளுக்கே என்றென்றும் உரியன

7)............ஒரு விலங்கு கடலிலிருந்து வெளியே வரக் கண்டேன். அதற்குப் பத்துக் கொம்புகளும் ஏழு தலைகளும் இருந்தன.

8) ..........தூய வானதூதர் முன்னிலையிலும் ஆட்டுக்குட்டியின் முன்னிலையிலும் நெருப்பாலும் கந்தகத்தாலும் வதைக்கப்படுவார்கள்.

11)ஆனால் கோழைகள், நம்பிக்கை இல்லாதோர், அருவருப்புக்குரியோர், கொலையாளிகள், பரத்தைமையில் ஈடுபடுவோர், சூனியக்காரர் சிலைவழிபாட்டினர், பொய்யர் ஆகிய அனைவருக்கும், நெருப்பும் கந்தகமும் எரியும் ஏரியே உரிய பங்கு .......... இதுவெ இரண்டாம் சாவு.

12) பின் அவர் மதிலை அளந்தார். அதன் உயரம் இருநூற்றுப் பதினாறு அடி. மனிதரிடையே வழக்கில் இருந்த அளவைகளையே ......... பயன்படுத்தினார்.

13) கேட்கச்செவி உடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும். கடவுளின் தோட்டத்தில் உள்ள வாழ்வு தரும் மரத்தினுடைய ......... வெற்றி
பெறுவோருக்கு உண்ணக் கொடுப்பேன்.

## துணிவு+தெளிவு+பணிவு+கனிவு =விடுதலை=மரியா ④



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

விடுதலை அன்னை வியப்பின் அன்னையென
விளம்புதல் தகுமே வினைகளும் மிகுமே
விவிலியம் இயல்பாய் கூறுதல் மிதமே
விழுமியம் நிறையவேக் காணுதல் நிசமே
யார் சொன்னாலும் எதைச் சொன்னாலும்
வாய்ச் சொல்லாமல் இசைபடல் ஒன்றே
பெண்ணியம் என்பதாய் கட்டுவர் இன்றும்
கண்ணியம் காப்பதாய் சுட்டுவர் என்றும்
இன்றைய நிலமையே இப்படி இருக்க
அன்றைய யூதர்கள் எப்படி இருப்பர்?
வாதங்கள் செய்திட வாய்ப்புகள் உண்டோ?
யூகங்கள் செய்தாலும் உதிப்புகள் உண்டோ?
கபிரியேல் தூதனார் கன்னி இவரிடம்
கடவுளின் வார்த்தையைக் கதைத்திட வருங்கால்
பயந்து ஒளிந்து ஓடிட வில்லை
நடுங்கி ஒடுங்கி வீழ்ந்திட வில்லை
வந்து உதித்தவர் வானகத் தூதர்தாம்
சிந்து உரைப்பகம் வல்லவர் வார்த்தைதாம்
என்று அறிந்துமே சந்தித்து துணிந்தார்
நின்று தளராது சங்கதி அறிந்தார்
ஐயம் எழுந்ததை சட்டென மொழிந்தார்
அய்யன் தீர்த்ததால் பட்டென தெளிந்தார்
உள்ளம் தெளிந்ததால் அவ்வண்ணமே பணிந்தார்
கள்ளம் கபடின்றி காலடி குனிந்தார்.
தூது உரைப்படி திருவுளம் தொடர்ந்தார்
மாது எலிசபெத்தை காணவே நடந்தார்
கனியாம் இயேசுவை கரு சுமந்தாலும்
கனிவாம் இயேசுவை கமழ்ந்திட புரிந்தார்
உள்ளத்தில் துணிவு வண்ணத்தில் தெளிவு
சிந்தையில் பணிவு செய்கையில் கனிவு
விடுதலை அன்னை மரியவரின் பண்புளாம்
வியந்திடும் அனைவருமே தேர்ந்திடும் மாண்புகளாம்





தனிக்கொடை என்பதை உணர்ந்து அவநம்பிக்கை விடுத்து இறை விசுவாசத்தோடு இறைவனை அணுகுவோம். அவரது அருளையும் , மீட்பையும், அன்பையும் நிறைவாகப் பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

கடவுளின் திட்டத்திற்கு கை கொடாமல் எதிர்க்கின்றவர் நீக்கப் படுகிறார், மற்றோர் அதிகாரி பொறுப்பு ஏற்கிறார். பேதுரு திரு அவையின் தலைவர் ஆகிறதைக் குறிக்கின்ற முன்னடையாளமாக விளங்கும் பகுதி இன்றைய முதல் வாசகம். முதல் வாசகம் மூன்றாம் வாசகத்தைத் தெளிவுபடுத்துகிறது. திரு அவையில் அதிகாரம் உடையோர் எவ்வாறு இருக்க வேண்டும் , அவ்வதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறும் அவ்விறை வார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

நாம் பெற்றுள்ள அருட்செல்வம் பொருட்செல்வம் இறைவன் மனிதனுக்கு அருளிய இலவசக் கொடைகள். நம் தகுதியை முன்னிட்டு அன்று , அவரது அன்புப் பெருக்கால்தான் அவர் நமக்கு அனைத்தையும் அளிக்கின்றார். அத்தகைய இறைவனை நமது அறிவினைப் பயன்படுத்தித் தேடிக் கொண்டிருக்கின்றோம். அறிவானது ஆராதனை செய்யும் இதயமாக மாற வேண்டும். கடவுளை அறிவுப் பூர்வமாக அல்ல உணர்வுப்பூர்வமாக அறியும்போது அக்கடவுளின் பேரன்பும் அரவது இரக்கமும் நம்மை இறை ஞானத்தோடு வழிநடத்தும் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் உமது இறைவெளிப்பாட்டை நிறைவாய்ப் பெற்று இயேசுவே உண்மையான மெசியா அவரே உமது திருமகன் என்பதை நாவால் அறிக்கையிட்டு உமக்கும் உமது திரு அவைக்கும் சாட்சிகளாய் வாழ அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வில் நாங்கள் உம்மை அறிவுப்பூர்வமாகத் தேடாமல் , விசுவாசக் கண்ணோடு உம்மை நோக்கவும் இறை ஞானத்தோடு உம்மைத் தேடவும், உணர்வுப்பூர்வமாக உமது பிரசன்னத்தை அனுபவிக்கவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ வாழ்வில் நாங்கள் உம்மீது கொண்டுள்ள இறை விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசத்தோடு உம்மை அணுகி உமது அருளையும் அன்பையும் நிறைவாகப் பெற அருள் புரிய உம்மை மன்றாடுகின்றோம்.

ப்பெற்று அம்மீட்பச் செய்தியை பிறரோடு பகிர்ந்து உமது இறை அரசை இவ்வுலகம் முழுவதும் கட்டி எழுப்பிட தேவையான இறையருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா , எங்களிடையே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையோடும் சகோதரத்துவத்தோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, இறைவனது மீட்பு இவ்வுலகம் முழுவதற்கும் பொதுவானது என்பதை ஏற்று இவ்வுலக மக்கள் அனைவரும் மீட்புப் பெற நாங்கள் அனைவரும் மீட்பின் கருவிகளாக வாழ அருள் புரிய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உம்மை மெசியாவாக ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காகவும், உமது உயிருள்ள பிரசன்னத்தின் மீது விசுவாசம் கொள்ளாதவர்களுக்காகவும் ஜெபிக்கின்றோம். நீர் அவர்கள் மீது உமது பேரன்பையும், அருளையும் பொழிந்து , உமது வல்லமையால் உந்தப்பட்டு அவர்களும் மீட்பின் கருவிகளாக இவ்வுலகில் வாழ தேவையான இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 21 ஆம் ஞாயிறு**

**எசா 22 :19-23 உரோ 11:33-36 மத் 16:13-20**

**முன்னுரை**

இயேசு இவ்வுலகில் மனிதனாக பிறந்து, தன்னையே மெசியா இறைமகன் என்று வெளிப்படுத்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. கிறிஸ்தவ மறையை அறியாதோர் இன்றில்லை எனலாம். எனினும் அன்றைய பொது மக்களுக்கும் இன்றைய பிற சமயத்தினருக்கும் அதிக வேறுபாடில்லை. அன்றைய மக்கள் இயேசுவை ஓர் இறைவாக்கினராக, புதுமை செய்பவராக போதகராகக் கண்டனர். அது போலவே இன்றைய மக்களும் அவரைக் காண்கின்றனர். ஒரு சிலரே அவரைக் கடவுளின் மகனாகக் காண்கின்றனர். மெசியாவாக ஏற்று விசுவாச அறிக்கையிடுகின்றனர் என்பதுதான் நிதர்சன உண்மை.

கிறிஸ்துவை கடவுளுடைய மகனாக ஏற்றுக் கொள்வதற்கு மனித அறிவு மட்டும் போதாது, இறைவெளிப்பாடு அவசியம் என்கின்றது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. கிறிஸ்துவை மெசியாவாக ஏற்று அவரிடம் வருவதற்குக் கடவுளின் தனிப்பட்ட அருள் தேவைப்படுகிறது. என் தந்தை அருள் கூர்ந்தால் அன்றி யாரும் என்னிடம் வர இயலாது என்று கிறிஸ்து யூதர்களிடம் கூறியது இதை எண்பிக்கின்றது. பேதுரு தன் சுய பலத்தால் கிறிஸ்துவை மெசியா என்று அறிக்கையிடவில்லை. மாறாக இறைவனது தனிப்பட்ட அருளாலே நமது விசுவாசத்தின் தொடக்கமும் முடிவும் இறைவனே என்கிறார் பவுல். இறையுதவியின்றி இயேசு என்று கூட நம்மால் கூற முடியாது என்பதும் பவுலின் போதனை. எனவே நாம் பெற்றுள்ள பெருங்கொடையாகிய விசுவாசம் இறைவன் நமக்களித்த





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 19 – ஆம் ஞாயிறு**

**1அரச 19:9.11-13 உரோ 9:1-8 மத் 14:22-23**

**முன்னுரை**

மனிதர் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம் என்கிறது திருப்பாடல் 118. இன்றைய வார்த்தை வழிபாடு நம்மை இறைவன் மீது நம்பிக்கை வைத்து அச்சமின்றி, கவலையின்றி வாழ அழைப்பு விடுக்கின்றது. இயேசுவால் தனிமைப்படுத்தப்பட்ட சீடர்கள் கடலில் செல்லும்போது கடல் கொந்தளிக்க, புயல் காற்று வீசுகிறது. பயந்து செத்துக் கொண்டிருந்த வேளையில் கடலில் இயேசு நடந்து வந்து, படகிலிருந்த அச்சீடர்களிடம் துணிவோடு இருங்கள், நான்தான் அஞ்சாதீர்கள் என்கிறார்.

நம்முடைய வாழ்க்கைப் படகை பல்வேறு துன்பங்கள் அலைக்கழிக்கின்றன. அவ்வேளையில் கடவுள் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று அச்சீடர்களைப் போல எண்ணுகிறோம். ஆனால் இருள் நம்மைக் கவ்விக் கொள்ளும் வேளையிலும் கடவுள் நம்மோடு இருக்கிறார். “அஞ்சாதீர்கள் என்று நம்பிக்கை கொடுக்கிறார். இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே என்று சொல்லி மோசேயிடம் தன்னை வெளிப்படுத்திய இறைவன் நமது அனுதின வாழ்வில் “நான்தான” என்று சொல்லி அவரது உயிருள்ள பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றார். நாமும் நமது வாழ்வில் எல்லா சூழ்நிலைகளிலும் இறைவனது நம்பிக்கையின் பிரசன்னத்தை இறைவார்த்தையிலும், அருட்சாதனங்களிலும் கண்டு அச்சம் தவிர்த்து துணிவோடும், நம்பிக்கையோடும் நமது வாழ்வைத் தொடர இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் மக்களுக்கு மெய்யான கடவுளை உணர்த்திய இறைவாக்கினர் எலியா கடவுளைச் சந்திக்கும் பகுதியே இன்றைய முதல் வாசகம். அஞ்சி அஞ்சி வாழ்வதிலும் சாவதே மேல் என்று சாவிற்கு கடவுளை மன்றாடிய எலியா இறைவாக்கினருக்கு கடவுள் மென்காற்றில் சுகமாக தோன்றுகிறார். எலியாவுக்கு நம்பிக்கையைக் கொடுத்த

இறைவன் நமது அனுதின வாழ்வில் துன்பங்களையும் தோல்விகளையும், எதிர்ப்புகளையும் சந்திக்கும்போது தமது உயிர்ப்பின் பிரசன்னத்தில் நமக்கு நன்மையையும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறார் என்று நம்பிக்கையோடு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இஸ்ரயேல் இனம் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். அதன் மீது கடவுள் தமது பாசத்தையும் வரங்களையும் பொழிந்தருளினார். அவற்றை எண்ணிப் பரவசமடைந்த புனித பவுல் கடவுளை வாழ்த்துகிறார் . அவ்வாழ்த்து இன்றைய இரண்டாவது வாசகமாக நமக்கு அமைகின்றது. நாமும் புனித பவுலைப் போல இறைவன் நமக்கு செய்த எல்லா நன்மைகளையும், அவர் நம்மீது கொண்டுள்ள அவரது பேரன்பையும், அருளையும் நினைவு கூர்ந்து அவரை வாழ்த்துவோம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை , ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும், உயிருள்ள இறைவனின் அருள் பிரசன்னத்தை உணர்ந்து அவ்விறைவனுக்கு சாட்சிகளாய் வாழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா, வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற துன்பங்களையும் சவால்களையும் கண்டு துவண்டு போய்விடாமல் நம்பிக்கையோடு எங்களது வாழ்வைத் தொடர தேவையான அருளையும் ஆசீரையும் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா எங்களது அனுதின வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் உம்மைப் பற்றிக் கொள்ளவும் எங்களது வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் உமது பேரிரக்கத்தையும் உமது ஆற்றலையும் தேடிட எமக்கு துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, எங்களது அனுதின கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் உமது மாண்பையும் உமது மாட்சியையும் கண்டு வாழ எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலத்தின் 20 ஆம் ஞாயிறு**

**எசா 56 :1.6-7 உரோ 11:13-15;29-32 மத் 15:21-25**

**முன்னுரை**

மனிதன், பொதுவாகத் தன் அனுபவம், தனது மொழி, இனம், மதம் முதலியவை மற்றையோரது அனுபவம். மொழி, இனம், மதம் முதலியவற்றிலும் பெரிது, உண்மையானது, நல்லது, இனியது என்று நினைப்பது உண்டு. குறிப்பாகத் தீவிர மதவாதிகள் கடவுளையும், கடவுளின் கொடைகளையும் தாங்களே முழுக்க தனக்கு எடுத்து இருப்பவர் போலவும், மற்றவர்கள் கடவுளின் ஞானத்திலும் அருளிலும் மீட்பிலும் பங்கு பெறுவது இல்லை எனவும் அடித்துப் பேசுவர். இத்தகைய





மனப்பான்மை இஸ்ரயேல் மக்களிடமும், யூதர்களிடமும் காணப்பட்டது. இத்தகைய மனநிலை இன்றும் நாம் வாழ்கின்ற சமூகத்தில் காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில்தான் இன்றைய இறைவார்த்தை பரந்த மனப்பான்மையுடன் கடவுளின் மீட்பு அனைவர்க்கும் உரியதுரு என்பதைப் புலப்படுத்துகின்றது.

இன்றைய நற்செய்தியில் இயேசுவுக்கும் கனானியப் பெண்ணுக்கும் இடையே ஒரு சமூக கலாச்சார ஆன்மீகப் போராட்டம் நடக்கின்றது. ஆபிரகாம் சோதோம் நகர் மக்களுக்காக மன்றாடுவது போன்றும் யாக்கோபு இறைவனிடம் நீ ஆசி வழங்கினாலொழிய நான் உன்னை போகவிடேன் என்று போராடுவது போன்றும் கனானியப் பெண் இயேசுவிடம் தனது மகளின் உடல் நலத்திற்காக விசுவாகத்துடன் வேண்டுகின்றார். இயேசுவும் அவரது மகளுக்கு சுகம் தருகிறார். ஆகவே இறைவனது மீட்பு அவரில் நம்பிக்கை கொண்டு அவரை நாடும் அனைவர்க்கும் உரியது என்பதை உணர்ந்து இறை நம்பிக்கையோடு இறைவனைத் தேடுவோம். அவரது அருளைப் பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

கடவுளின் மீட்பு அனைவருக்கும் உரியது என்றும், உலகில் உதிக்கும் ஒவ்வொரு உயிருக்கும் மீட்பினைக் கடவுள் வாக்குறுதியாகக் கொடுக்கின்றார். என்றும் இறைவாக்கினர் எசாயா கூறுகின்றார். இதை, தான் தேர்ந்து கொண்ட இனத்தின் வழியாக வெளிப்படுத்திய இறைவன் அதில் மண்ணுலகம் முழுவதும் ஆசி பெற அழைக்கின்றார். அவர்களை என் மலைக்கு அழைத்து வருவேன் , இறைவேண்டல் செய்யப்படும் என் இல்லத்தில் அவர்களை மகிழச் செய்வேன் என்கிறார் ஆண்டவர். உயிர் அனைத்திற்கும் தந்தை, ஆதலால் அவர் அன்பும், பரிவும் , இரக்கமும் மக்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் உரியது என்று எசாயா கடவுளின் அன்பை வெளிப்படுத்துகின்றார்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

இறைவனது மீட்பும் அவரது அன்பும் எல்லோருக்கும் உரியது என்று சொல்லி, யூதர்களுக்கும், புறவினத்தாருக்கும் இடையே ஓர் ஆன்மீகப் போராட்டத்தினைத் தொடங்கி வைக்கிறார் புனித பவுல். மீட்பின் வரலாற்றில் பிற இனத்தவர் கிறிஸ்துவை மெசியாவாக எற்ற நிலையில் யூத இனத்தவர் அவரை மெசியாவாக ஏற்றுக் கொள்ளாததற்கு உரிய காரணத்தை ஆழமாக விளக்குகிறார் புனித பவுல் இன்றைய இரண்டாவது வாசகத்தில். யூத இனத்தவர் பிற இனத்தவர்கள் மீட்படைவதைக் கண்டு பொறாமைப்பட்டு அவர்களும் கிறிஸ்துவை ஏற்று மீட்படைவர் என்று சூளுரைக்கும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் உமது மீட்பின் முழுமையைப்